Deposition of witness.

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, NILAKOTTAI

C.C.No. 338/2022 in Cr.No. 239/2018

LW 2 Deposition of PW 2 Type of witness: Injured

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கிருஷ்ணமூர்த்தி | தொழில் | : | -- |
| த/பெ | : | முனியாண்டி | வயது | : | 51/2026 |
| கிராமம் | : | செல்வநகர் | | | |
| தாலுகா | : | நிலக்கோட்டை | | | |

Solemnly affirmed in accordance with the provisions of section 3 and 4 of the Indian Oaths Act 1969 r/w. rule 35,36 of criminal rules of practices 2019 of the day of 23.02.2026.

எதிரிகள் ஆஜர்.

**<u>முதல்விசாரணை.</u>**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அழகர்சாமியின் மகள் வினிதாவை என் மகன் திருமணம் செய்து அழைத்து சென்றுவிட்டார். கடந்த 02.10.2018 அன்று காலை 06.00 மணியவில் செல்வநகரில் கோவில் முன்பு இருக்கும் எனது வீட்டின் அருகில் ஒரு பெரிய காரியத்திற்காக நாங்கள் வந்திருந்த போது ராமகிருஷ்ணன், ராமராஜ் மற்றொரு நபர் வந்து எங்களை அடித்தனர். அதில் ராமராஜ் என்னை கத்தியால் குத்தினார். கத்தியால் குத்திய பிறகு எனக்கு மயக்கம் வந்துவிட்டது. **(சாட்சி தனது வயிற்றில் இருக்கும் தனது காயத்தை காட்டினார்) எனக்கும்** என் பையனுக்கும் என் வீட்டுக்காரம்மாவிற்கும் அடிப்பட்டது. நிலக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சென்றோம். போலிசார் எங்களை விசாரணை செய்தனர். பின்னர் மேல்சிகிச்சைக்காக மதுரை அரசுமருத்துவமனைக்கு சென்றோம். மதுரை மருத்துவமனையில் நான் 20 நாட்கள் உள்நோயாளியாக இருந்தேன். தையலை பிரிக்கும் முன்பே என்னை அனுப்பிவிட்டனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை.**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்குவிசாரணை இல்லை என தெரிவித்தார்.

/ஒ.ம்./

இரா. ரகுராமன், B.A., L.L.M.,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

நிலக்கோட்டை.